13th March 1964]

திரு. கரு. சீமைச்சாமி : இந்த ரோடு இன்ஸ்பெக்டர்கள் ஐந்தாண்டுக் காலம் வேலை செய்தும் கூட நிரந்தரமாக்கப்படவில்லை. ஐந்தாண்டு சர்வீஸ் போட்ட பிற்பாடு நிரந்தரம் ஆக்குவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : இந்த ரோடு இன்ஸ்பெக்டர்களுக்கு இந்த பென்ஷன் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

Provident Fund Scheme for Road Inspectors

***255 Q.**—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is an order of Government to enlist the Road Inspectors as Provident Fund subscribers; and

(*b*) if so, whether it is a fact that it has not been implemented so far and the reasons therefor?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) The question as to who should maintain the Contributory Provident Fund (Madras) accounts of the Road Inspectors was engaging the attention of the Government and the Accountant-General, Madras, and pending a decision in the matter, the applications for admission to the fund were kept in abeyance by the Highways and Rural Works Department. A decision has since been taken that Accountant-General, Madras, should continue to maintain the accounts of the work-charged establishment of the Highways and Rural Works Department till the duration of the National Emergency. The Chief Engineer (Highways and Rural Works) has reported that the Divisional Engineers concerned have been instructed to obtain the applications from all the provincialised Road Inspectors in their Divisions and to see that they are admitted to the Contributory Provident Fund (Madras) Scheme quickly.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*— An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GOVERNMENT BILL.

THE LAND IMPROVEMENT LOANS (MADRAS AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964.

[13th March 1964

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964–65.

(1) DEMAND NO. II—MOTOR VEHICLES ACTS—ADMINISTRATION.

THE HON SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 15,85,000 under Demand No. II—Motor Vehicles Acts—Administration.'

திரு. து. ப. அழகமுத்து : கனம் சபாநாயகர் அவர்களே, என் பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 15,85,000 under Demand No. II—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100.'

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, ராஜ்யத்தில் இருக்கக்கூடிய பொதுப் போக்குவரத்து நிலை சம்பந்தமான மான்யக் கோரிக்கையை முதலிலே எடுத்துக் கொண்டு, அதை நிறைவேற்றிய பிறகு, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் சம்பந்தமான கோரிக்கையைப் பிரேரேபிக்கலாம் என்று நான் நினைக்கிறேன். காரணம் என்னவென்றால், இரண்டு பிரச்னைகளையும் மாற்றி மாற்றிப் பேசுவதனால், ஒரு பிரச்னையிலும் சரியான முடிவுகள் காண முடியாத நிலை ஏற்படக் கூடும். தனித்தனியாக அங்கத்தினர்களுடைய அபிப்பிராயங்கள், கருத்துக்கள், ஆலோசனைகள், எல்லாவற்றையும் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத் தங்களிடத்திலே இந்த அனுமதியை நான் கேட்கிறேன்.

நம்முடைய ராஜ்யத்தின் போக்குவரத்து நிலை நல்ல சிறப்பான முறையிலே இருக்கிறது, வேகமான வளர்ச்சி அடைந்து கொண்டு வருகிறது என்பதைப்பற்றி எல்லாம் மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே தெளிவாக நான் குறிப்பிட்டிருக்கிறேன். குறிப்பாக, நம்முடைய ராஜ்யத்தில் இப்பொழுது, 5,878 பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் 2,73,000 சில்லறை ஸீட்டுகள் அடங்கியிருக்கின்றன. கடந்த ஆண்டிலே 5,632 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. அவற்றில் 2,52.,000 ஸீட்டுகள் இருந்தன. இந்த அளவுக்குக் கணிசமான முன்னேற்றம் சென்ற ஆண்டிலே ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னாலும், நம்முடைய